// மிக மிக அவசரம் // // தனிகவனம் //

வேலூர் மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலரின் செயல்முறைகள்
ந.க.எண். 4580/அ3/2023 நாள்: 06.11.2023

-----

| | |
|---|---|
| பொருள்: | பள்ளிக்கல்வி – சார்நிலைப்பணி - வேலூர் மாவட்டத்திலுள்ள அரசு/நகரவை உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகளில் பணியாற்றும் பட்டதாரி ஆசிரியர்களின் விவரங்களை இணைப்பில் உள்ள Google Sheet இல் பதிவேற்றம் செய்யக் கோருதல் - தொடர்பாக. |
| பார்வை: | சென்னை – 6, தமிழ்நாடு பள்ளிக்கல்வி இயக்குநர் அவர்களின் கடித ந.க.எண். 59896/பி1/இ1/2023, நாள். 02.11.2023. |

-----

பார்வையில் காணும் செயல்முறைகளுக்கிணங்க வேலூர் மாவட்டத்தில் உள்ள அரசு/நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளிகளில் பணிபுரியும் அனைத்து பாட பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் ஆசிரியர் பயிற்றுநர்கள் ஆகியோரின் விவரங்களை இணைப்பபில் காணும் Google Sheet இல் 09.11.2023 அன்று நண்பகல் 12.00 மணிக்குள் பதிவேற்றம் செய்யுமாறு அனைத்து அரசு/ நகரவை உயர் மற்றும் மேல்நிலைப் பள்ளித் தலைமையாசிரியர்கள் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

மேலும் படிவத்தில் உள்ள கலங்களில் கோரப்பட்டுள்ள அனைத்து விவரங்களும் பணிப்பதிவேட்டில் உள்ளவாறு சரியாகவும், தெளிவாகவும் பூர்த்தி செய்யப்பட வேண்டும் என சார்ந்த பள்ளி தலைமையாசிரியர்களுக்கு அறிவுறுத்தப்படுகிறது.

மேற்காண் விவரங்களில் தவறுதலாக பதிவேற்றம் செய்யட்டதை கண்டறியப்பட்டால் சார்ந்த பள்ளி தலைமைஆசிரியரே முழு பொறுப்பேற்க நேரிடும் என்பதை கவனத்தில் கொண்டு உரிய பதிவுகள் சரிபார்த்து பதிவேற்றம் செய்தும் Google Sheet ல் உள்ளவாறே தங்கள் பள்ளிக்கான விவரங்கள் மட்டும் பதிவிறக்கம் செய்தும் சார்ந்த ஆசிரியர்களின் சான்றுகள் மற்றும் பணிப்பதிவேட்டின் நகலுடன் 09.11.2023 மாலை 5 .மணிக்குள் இவ்வலுவலக அ3 பிரிவில் தனி நபர் மூலம் அனுப்புமாறு அனைத்து பள்ளி தலைமைஆசிரியர்களுக்கு மீள அறிவுறுத்தப்படுகிறது.

இணைப்பு – Google Form

// ஒப்பம் //

// செ.மணிமொழி //
முதன்மைக் கல்வி அலுவலர்,
வேலூர்.

பெறுநர்

1. கூடுதல் முதன்மைக் கல்வி அலுலவர்,
   ஒருங்கிணைந்த பள்ளிக் கல்வி, வேலூர் மாவட்டம்.
2. வேலூர் ,மாவட்டக் கல்வி அலுவலருக்கு (இடைநிலைக் கல்வி)

. தொடர் நடவடிக்கையின் பொருட்டு அனுப்பலாகிறது.

3. தலைமையாசிரியர்கள்
   அனைத்து உயர் மற்றும் மேல்நிலைப்பள்ளிகள், வேலூர் மாவட்டம்.